முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் தன்வந்திரி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

20.04.2019, சனிக்கிழமை

**1. வரங்கள் தரும் ஆறுமுக அரங்கா**
**வல்லமைமிக்க அன்னதானம்**
**திறம்பட உலகமெங்கும் செய்து**
**தொண்டு வளர்க்கும் ஞானதேசிகா**

2. தேசிகா உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் நித்ய பிரசன்ன ஆசி
ஆசிபட **விகாரி தகரின் திங்கள்**
**அறிவிக்க சப்தம திகதி காரி வாரம்**
**(விகாரி வருடம் சித்திரை மாதம் 7ம் நாள் 20.04.2019, சனிக்கிழமை)**

**3. வாரமதில் தன்வந்திரி யானும்**
வழங்குவேன் உலகோர் நலம் பெற
சோரமில்லா ஞான யுகத்தை
சுப்பிரமணியர் அருளால் படைக்க

4. படைக்கவே அவதாரமாக வந்த
பரமானந்த சதாசிவ குருவரங்களை
தடைபடா உலக மக்கள் அணுகி
தரணியிலே தீட்சை ஆசி பெற்று

5. ஆசி பெற்று குருவாக ஏற்று
அறமெனும் தருமத்தில் உதவி
ஆசி பெற்ற குமரகிரி தன்னில்
அணுகி கோ பூசை கலந்து

6. கலந்துமே பசுவை பாதுகாப்பும்
கனிவான சேவையில் இணைந்து
வளம் தரும் வழிபாடு செய்து
வடிவேலனின் சரவண ஜோதி ஏற்றி

7. ஏற்றியே வருகையுடன் வழிபாடு
எல்லா தேசமும் செய்து வர
மாற்றம் கலியுகத்தில் உண்டு
மக்களை காக்கும் ஞான ஆட்சியாக

8. ஆட்சியாக மாற்றம் அடைந்து
ஆறுமுகனார் ஆசி பெற்றவர்கள்
ஆட்சிதனில் பதவி ஆளுமை கண்டு
அற்புதம் தன்னை உலகம் அடையும்

9. அடையவே மக்களை நோக்கி
அழைப்பு தந்து வரம் தரும்
சுடர்மிக்க ஞான யோகி
சூட்சுமமிக்க ஞானத் தலைவனை

10. தலைவனை உலகமே ஏற்றிட
தருமத்தை எங்கும் பரப்பிட
ஊழல் லஞ்சம் வஞ்சமில்லா
உயர்வான ஞான ஆட்சியாக மாறும்

11. மாற்றம் காண வேண்டி மக்களே
மறுப்பிலா ஏற்று அரங்க மகானை
ஆற்றல் தர வணங்கி வருகவே
அகிலமே ஞானபலம் பெறும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் தன்வந்திரி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

வேண்டியோர்க்கு எல்லாம் மனம் மகிழ வரங்களை தந்தருளும் முருகப்பெருமானின் அவதாரமே ஆறுமுக அரங்கமகா தேசிகனே மனிதனின் ஜென்மத்தைக் கடைத்தேற்றவல்ல சக்திமிக்கதும் ஞானம் பெற துணையாய் நிற்கின்றதும் பசித்த உயிர்களுக்கு பசியாற்றுவித்தலுமாகிய வல்லமைமிக்க அன்னதானத்தினை மிகுந்த திறமையுடன் தளராமல் தொடர்ந்து பிரம்மாண்டமாய் உலகமெங்கும் செய்து வருகின்ற ஞானதேசிகனே தொண்டுகளை உலகமெங்கும் செய்திட செய்து தொண்டினை பொதுநலத்தை உலகமெங்கும் வளர்க்கின்ற பரோபகார ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகமெங்கும் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் சித்திரை மாதம் 7ம் நாள் 20.04.2019, சனிக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே தன்வந்திரி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் தன்வந்திரி பகவான்.

மாயையுள் சிக்கி தவிக்கின்ற கலியுகத்தின் மக்களை மீட்டு பாவவினைகளில் சூழப்பட்ட மக்களை பாவங்களில் இருந்து மீட்டு குற்றமற்ற ஞானயுகத்தினை சர்வ வல்லமைமிக்க முருகப்பெருமானின் அருளால் இவ்வுலகினில் படைத்திட வேண்டியே வல்லமையுடன் முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட பரமானந்த சதாசிவ சற்குரு அரங்கமகா தேசிகனாரை உலக மக்களெல்லாம் தடையின்றி தவறாது தரிசனம் செய்து அரங்கரிடத்து தீட்சை உபதேசம் பெற்று அரங்கமகானை குலகுருவாக ஏற்றுக் கொண்டு அரங்கமகான் உலக நலம் கருதி செய்கின்ற தானதருமப் பணிகளிலே அன்னதானப் பணிகளிலே பொருளுதவிகள் செய்து சுப்பிரமணிய பெருமானின் அருளாசி பெற்றிட்ட குமரகிரி எனும் புனித தலத்தினை தரிசனம் செய்து ஆங்கே நடக்கின்ற கோபூஜைகளில் கலந்து கொண்டு அங்குள்ள பசுக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும்விதமாக உதவிகள் செய்து பசுக்களுக்கு கனிவுடன் உணவு அளித்து ஆங்கே நடைபெறும் வளம் தரும் கோபூஜைகளை செய்து வழிபட்டு ஆங்கே சரவணஜோதிதனை ஏற்றி முருகப்பெருமானை ஜோதியினுள் வந்தமர்ந்து அருள் செய்திடுமாறு வேண்டுகோள் வைத்து சுப்பிரமணியர் வருகையுடன் வழிபாடுகளை செய்திட வேண்டும். உலகமெங்கும் சுப்பிரமணியபெருமான் வெளிப்படும் சரவணஜோதி வழிபாட்டினை பரப்பி உலகின் எல்லா தேசத்திலும் சரவணஜோதி வழிபாடுகளை மக்கள் செய்து வர, இந்த கலியுகத்தின் கொடுமைகள் மறைந்து மாற்றம் உண்டாகும். மாற்றங்கள் முருகப்பெருமான் தலைமையில் ஞானிகளால் உண்டாக்கப்பட்டு உலகினில் ஞான ஆட்சி உருவாகிடும்.

அத்தகைய ஞானஆட்சியிலே முருகப்பெருமானின் ஆசி பெற்றிட்டவர்கள் மட்டுமே ஆட்சி பொறுப்பில், பதவிகளில் அமர்ந்து ஆட்சி செய்கின்ற அற்புதமான நிலையை இவ்வுலகம் அடைந்து உலகினில் ஆட்சியானது ஞானஆட்சியாக ஞானிகள் ஆட்சியாக ஞானவான்களின் ஆட்சியாக அமைந்திடும். இவ்வித மாற்றங்களை உருவாக்கிடவே உலக மக்களை நோக்கி தாயினும் பெரும் அன்புமிக்க பெருந்தாய் கருணையோடு அவர்களுக்கு வரமளித்து காக்கின்ற அருட்பெருஞ்ஜோதி ஞானயோகி சூட்சுமம்மிக்க ஞானத்தலைவன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை உலக மக்களெல்லாம் ஏற்று வணங்கி வர, ஆறுமுக அரங்கமகான் ஆற்றுகின்ற தானதருமங்களை உலகமெங்கும் பரப்பி வர, உலகினில் ஊழலும் லஞ்சமும் இல்லாத வஞ்சமற்ற உயர்வான ஞான ஆட்சியாக இக்கலியுக ஆட்சி மாறிடும்.

உலகினில் நல்ல மாற்றங்கள் உருவாக வேண்டுமெனில் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை ஏற்றுக் கொண்டு ஆற்றல் பெற வேண்டியே அரங்கன் திருவடி பணிந்து வணங்கி வரவர, உலகமே ஞானபலம் பெற்று சிறப்படையும் எனக் கூறுகிறார் மகான் தன்வந்திரிபகவான்.

–சுபம்–